கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

ஓக்கா (LUKE) 4:22

VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஆகஸ்ட் - AUGUST
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

1 யோவான் 1:7



இடம்: காந்தி மியூசியம் - மதுரை

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் 80வது சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	7
வாலிபர் பகுதி	9
ஓராண்டில்... வேதவாசிப்பு	
சிறுவர் பகுதி	12

In Memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **Dr. P.C. PHILEMON RAJA** Ph.D.,

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.S. (IT&M)., M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., **C. கியாமிஸ் கார்த்திக்,** B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B. கருப்பசாமி பாண்டியன்** B.A., B.L.
அட்வகேட் **V. சுப்பிரமணியன்** M.A., B.L.

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7.00 மணி

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

கிருபையுள்ள வார்த்தை
நம்மை கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமைக்குள் வழிநடத்தும் வல்ல பிதாவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc

World Literature Publication : Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

இரத்தம் விரயமாகின்றதோ?
Is Blood being wasted?



- P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் இனிதான பெயராலே எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

பிரியமானவர்களே! ஒருவர் சிந்தும் இரத்தத்திற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும், பகையின் நிமித்தம் சிந்தப்படும் இரத்தம் பயனற்றது. ஒரு தாய் தன் குழந்தையை உதிரம் சிந்தி பெற்றெடுப்பதற்கு பின் உன்னத நோக்கம் உண்டு. இம்மாதம் உலகிலேயே இதுவரை யாருமே சிந்தியிராதபடி மிகவும் உன்னதமான, பயனுள்ள நோக்கத்திற்காக சிந்தப்பட்ட இயேசுகிறிஸ்துவின் இரத்தம், விரையமாகின்றதோ? என்ற கண்ணோட்டத்தில் நாம் செய்தியைப் பார்ப்போமா!

1. இரத்தம் பற்றி பைபிளும், அறிவியலும்...

லேவியராகமம் 17:11 "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே."

இரத்தம் குறித்த பைபிள் மற்றும் அறிவியல் கண்ணோட்டம் (The Biblical and Scientific Perspective on Blood) என்னவென்று, நாம் அறிய வேண்டியது அவசியமாகும். அறிவியலின் படி, மனிதனின் உயிர் என்பது உடலில் உள்ள அனைத்து செல்களுக்கும் தேவையான ஊட்டச்சத்தையும் ஆக்ஸிஜனையும் கொண்டு சேர்க்கும் இரத்த ஓட்ட அமைப்பை (Circulatory System) பொறுத்தே அமைந்துள்ளது. பைபிள் கூறுவது போலவே, அறிவியலும் இரத்தத்தையே உடலின் மிக முக்கியமான ஜீவாதாரமாகக் கருதுகிறது.

அறிவியல் பூர்வமாக, ஒரு மனிதனின் உடலில் இருந்து இரத்தம் முற்றிலுமாக வெளியேறி விட்டாலோ அல்லது இரத்த ஓட்டம் நின்றுவிட்டாலோ, மூளை மற்றும் இதர உறுப்புகளுக்கு ஆக்ஸிஜன் செல்லாமல் மனிதன் உடனடியாக இறந்துவிடுவான். இதையே தான் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பைபிள், 'மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது' (லேவியராகமம் 17:11) என்று மிகத் துல்லியமாகக் கூறியுள்ளது.

கி.பி.1800ம் ஆண்டுகளில், 'இரத்தம் போக்குதல்' (bloodletting) என்பது பொதுவான மருத்துவ பழக்கமாக இருந்தது. அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் கி.பி.1799ல் இப்படிப்பட்ட வைத்தியத்தினால் (கடுமையான இரத்த இழப்பினால்) மரித்தார். சரீரம் முழுவதும் இரத்தம் சுற்றி வருகிறது என்பதை வில்லியம் ஹார்வி கி.பி. 1616ல் தான் கண்டு பிடித்தார். அதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே பைபிளில் சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது. இரத்தம் ஜீவனுக்குச் சமானம் (லேவியராகமம் 17:14) என்று எழுதப்பட்டுள்ளது. பைபிள், அறிவியல் புத்தகமில்லை என்றாலும், பைபிளில் சொல்லப்பட்டுள்ள அறிவியல் மிகவும் துல்லியமானதாக இருக்கின்றது. மாம்ச வாழ்விற்கு இரத்தம் உடல் முழுவதும் சுற்றிவர வேண்டியது அவசியம். ஆயிரம் ஆண்டுகட்கு முன்பாக திருமறை வெளிப்படுத்தியதை, அறிவியல் ஆராய்ச்சிகள் இப்பொழுது உறுதி செய்துள்ளது.

2. பைபிளில் இரத்தம்...

பைபிளில், 'இரத்தம்' என்பது மிகவும் பரிசுத்தமானதாகவும், ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை இரத்தம் பற்றிய ஆழமான உண்மைகள் கூறப்பட்டுள்ளன.

பைபிள் இரத்தத்தை வெறும் திரவமாகப் பார்க்காமல், அதை உயிரின் இருப்பிடமாகப் (அடையாளமாக) பார்க்கிறது. விலங்குகளின் மாம்சத்தைப் புசிக்கும்போது, அதன் இரத்தத்தைச் சேர்த்துப் புசிக்கக் கூடாது என்று கடவுள்

மனிதனுக்குக் கட்டளையிட்டார் (ஆதியாகமம் 9:4; லேவியராகமம் 17:14). கர்த்தருடைய பிள்ளைகள் ஒருபோதும் அதனை புசிக்கவே கூடாது. அவ்வாறு புசிப்பது பாவமாகும் (அப்போஸ்தலர் 15:20,28).

அடுத்ததாக, பைபிளில் **இரத்தம் பாவநிவாரணியாக** வெளிப்படுத்தப்பட்டுளளது. பரம கடவுளின் சட்டப்படி, பாவத்திற்கு மரணமே தண்டனை. மனிதனின் பாவம் மன்னிக்கப்பட ஒரு உயிர் 'பலியாக' வேண்டும். அதற்கு இரத்தமே தகுதியானது. ஏனெனில், 'இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு இல்லை' (எபிரெயர் 9:22). பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மனிதர்களின் பாவத்திற்காக ஆடு, மாடுகளின் இரத்தம் பலிபீடத்தில் தெளிக்கப்பட்டு பாவநிவாரணம் செய்யப்பட்டது (லேவியராகமம் 17:11). புதிய ஏற்பாட்டு காலத்தில், கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, மனிதர்களை இரட்சித்து, அவர்களை நீதிமான்களாக்குகின்றது (ரோமர் 3:23-26; எபேசியர் 1:7; 1பேதுரு 1:18-19).

அடுத்ததாக, ஆண்டவர் இயேசு, சிந்தப்பட்ட தன் இரத்தத்தினை புதிய உடன்படிக்கை என்று சொன்னார். ஆகையால் பைபிளில் **இரத்தம் புதிய உடன்படிக்கையாக இருக்கின்றது.** 1கொரிந்தியர் 11:25 "போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்."

மிருகங்களின் இரத்தம் தற்காலிகமான நிழல் மட்டுமே. மனிதகுலத்தின் பாவங்களை நிரந்தரமாக நீக்க, 'இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தமே ஒரே வழி' ஆகும் (மத்தேயு 26:27,28; எபி 13:20). அதாவது, கிறிஸ்துவின் இரத்தமே, பரிசுத்தமான பரம பிதாவையும், பாவியான மனிதனையும் இணைக்கின்ற உடன்படிக்கையாக இருக்கின்றது.

அடுத்தாக, பைபிளில் **இரத்தம், கர்த்தரால் நீதி செலுத்துவதற்கும், பழிவாங்குதலுக்குமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.** அநியாயமாகச் சிந்தப்படும் இரத்தத்திற்கு கடவுள் கணக்குக் கேட்பார் என்று பைபிள் கூறுகிறது (ஆதியாகமம் 4:10; வெளி 19:2). அநியாயமாய் இரத்தம் சிந்துவதை கடவுள் வெறுக்கிறார். நமது பாவங்களுக்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தம், தேவ நீதியை நிறைவேற்றுவதாகவும் (நமது பாவங்களுக்கு பதிலீடாகவும்) உள்ளது (எபிரெயர் 9:12).

3. கிறிஸ்துவின் இரத்தம்...

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, கொல்கதா மலையில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்காக, தன் இன்னுயிரை, இரத்தம் சிந்தி தியாகம் செய்தார்;. அவர் அன்று சிந்திய இரத்தம், மனுக்குலத்திற்கு இன்றளவும் செய்துக்கொண்டிருக்கின்ற நன்மைகள் சொல்லிமுடியாதது.

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற. குற்றமில்லாத மாசற்ற இரத்தம், நமக்கு பாவத்திலிருந்து விடுதலை (மீட்பை) தந்துள்ளது (1 பேதுரு 1:19). நமது எதிராளியான சாத்தானின் தாக்குதல்கள் மற்றும் பொல்லாப்புக்கு எதிராக நின்று நாம் வெற்றிபெற, இயேசுவின் இரத்தம் ஒரு வல்லமையான ஆவிக்குரிய ஆயுதமாக செயல்படுகிறது. வெளிப்படுத்துதல் 12:11 "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்."

இயேசுவின் இரத்தத்தினாலே பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது (எபிரெயர் 10:19,20). மேலும், அருவருக்கதக்க பாவிகளான நம்மை, பிதாவிற்கு முன்பாக ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கியுள்ளது. வெளிப்படுத்தல் 1:6 "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்."

என்றும் உயிரோடிருக்கின்ற பரலோக கடவுளுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நம் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரித்துள்ளது. ஆகையால், பழைய ஏற்பாட்டில் லேவியர்கள் மாத்திரம் செய்த பரிசுத்த பணியை, இன்றைய நாட்களில் கிறிஸ்ததுவின் இரத்ததினாலே கழுபட்ட ஒவ்வொரும் செய்ய முடிகின்றது (எபிரெயர் 9:14). மேலும், பழைய ஏற்பாட்டில் மிருகங்களின் இரத்தம் தற்காலிகமாகப் பாவங்களை மூடியது. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் இரத்தம் நம்

பாவங்களை முற்றிலும் நீக்கி, நம்மை நித்திய வாழ்விற்கு நேராக வழிநடத்துகின்றது. வெளிப்படுத்தல் 7:14 "அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்."

4. கிறிஸ்துவின் இரத்தம் விரயமாகின்றது...

கிறிஸ்துவின் இரத்தம், சிலுவையில் முழு உலகத்தின் பாவங்களுக்காகவும், ஒருமுறை மட்டுமே விலையேறப்பெற்ற பலியாகச் சிந்தப்பட்டது. ஆன்மீக ரீதியில், இந்த இரத்தம் ஒருபோதும் தன் வல்லமையை இழக்காது. இருப்பினும், ஒரு மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் 'கிறிஸ்துவின் இரத்தம் விரையமாவது' அல்லது 'வீணடிக்கப்படுவது' என்பது, அந்த இரத்தம் சிந்தப்பட்டதின் நோக்கத்தை மதிக்காமல் வாழ்வதைக் குறிக்கிறது.

இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி, மனிதகுலத்தின் பாவக் கடனை முழுமையாகச் செலுத்திவிட்டார். ஆனால், ஒரு மனிதன் அதை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாதபோது, அந்த தியாகம் அவனுக்குப் பலனளிக்காமல் போகிறது. அதாவது, இரட்சிப்பை நிராகரிக்கும்போது, அவருக்காகச் சிந்தப்பட்ட இரத்தம் வீணாகிறது (யோவான் 3:18; மாற்கு 16:16).

ஒருவர் மனந்திரும்பி, பாவ மன்னிப்பிற்கென்று திருமுழுக்கு பெற்ற பின்பு, தேவ கிருபையை அலட்சியம் செய்து, வேண்டுமென்றே பாவ வாழ்க்கையைத் தொடர்ந்தால், அவர் கிறிஸ்துவின் இரத்தத்தை மிதிக்கிறான்; அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினை விரயமாக்கின்ற படியினால், அவர்களுக்கு கொடிய தண்டனை கிடைக்கும் என்று பைபிள் எச்சரிக்கிறது. எபிரெயர் 10:26,29 "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்."

தன் பாவங்கள் மன்னிப்படைவதற்கும், பரலோகத்திற்கு போவதற்கும் இயேசுவின் இரத்தம் மட்டும் போதாது, தன்னுடைய சொந்த நற்கிரியைகளும் சடங்குகளுமே காரணம் என்று ஒருவன் நினைத்து, சுயநீதியின் மேல் நம்பிக்கை வைக்கும்போது, அவர் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மதிப்பைத் தாழ்த்துகிறான் (கொலே 2:6-10). அப்படிப்பட்ட சுயநீதிக்கார கிறிஸ்வர்கள் ஒவ்வொருவருமே கிறிஸ்துவின் இரத்தத்தின் மதிப்பினை தாழ்த்துவதால், அதை விரயமாக்குகின்றனர். கொலோசெயர் 2:8 "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களை கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல், கிறிஸ்துவைப் பற்றினதல்ல."

அநேக கிறிஸ்தவர்கள் சுயநீதிக்காரர்களாக இல்லாமலிருக்கலாம், ஆயினும் அவர்கள், பரம கடவுள் மோசேயின் மூலமாக இஸ்ரயேல் மக்களுக்கு மாத்திரம் கொடுத்த (உபாகமம் 5:1-5). நியாயப்பிரமாண நீதிக்காரர்களாக இருக்கின்றனர். நியாயப்பிரமாணம் மனுக்குலத்திற்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் விரோதமாகவும் இருந்தது. அதனை கிறிஸ்து சிலுவையில் ஆணியடித்து, முடிவு உண்டாக்கினார் என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகின்றார் (கொலோசெயர் 2:10-15). ஆயினும் அநேக கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் போதனையோடு நியாயப்பிரமாணத்தினை கடைபிடிக்க முயன்று, ஆண்டவருடைய இரத்தத்தின் மகிமையை மட்டுப்படுத்துகின்ற படியினால், விரயமாக்கிகொண்டிருக்கின்றனர். கலாத்தியர் 2:21 "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிற தில்லை. நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே."

கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு நிபந்தனையற்ற மன்னிப்பைத் தந்துள்ளது. அந்த மாபெரும் மன்னிப்பைப் பெற்ற நாம், மற்றவர்களின் தவறுகளை மன்னிக்காமல் கசப்பையும் குரோதத்தையும் மனதில் வைத்திருக்கும்போது, நமக்குக் கிடைத்த மன்னிப்பின் இரத்தத்தை நாம் அர்த்தமற்றதாக்குகிறோம். நாம் மற்றவர்களை

மன்னிக்க மறுக்கின்ற ஒவ்வொரு முறையும், அதாவது, கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு தந்த மன்னிப்பினை மற்றவர்களுக்கு தர மறுக்கின்ற ஒவ்வொரு முறையும் அவருடைய மதிப்புமிக்க இரத்தத்தை விரயமாக்கின்றோம் மற்றும் நாம் பெற்ற மன்னிப்பினையும் இழக்கும் அவலநிலைக்கு நம்மை நாமே உட்படுத்துகின்றோம் (மத்தேயு 6:14,15; 18:32-35; கொலோசெயர் 3:12,13).

ஆண்டவர் இயேசுவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவுபடுத்தும் திருவிருந்தில், ஒருவர் தன் நிலை உணர்ந்து கர்த்தரோடு ஒப்புரவாகாமல் அலட்சியமாகப் பங்கேற்பது, அதாவது, நம்மை நாமே நிதானித்து அறியாமல் தகுதியற்ற முறையில் திருவிருந்தில் பங்கேற்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தினையும், தியாகத்தினையும் மட்டுப்படுத்துகின்றோம். அப்படி செய்கின்ற ஒவ்வொரு முறையும் நமக்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் மகிமையான இரத்ததினை நாம் விரயமாக்குகின்றோம் (1கொரிந்தியர் 11:27-31).

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற மகிமையான இரத்தம், குறைவுள்ளதோ அல்லது வீணாகப் போகக்கூடியதோ அல்ல. ஆயினும், நாம் நமது அவிசுவாசம், உலக ஆசை, மனந்திரும்பாத இதயம் மற்றும் பெருமையினால் அந்த விலையேறப்பெற்ற இரத்தத்தின் பலனைத் நம் வாழ்க்கையில் இழந்துபோகிறோம். அதனால் கிறிஸ்துவின் இரத்தத்தினை விரயமாக்கிக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறு மாம்ச காரியங்களுக்காக கிறிஸ்துவின் தியாகத்தினை மட்டுப்படுத்துகிறவர்களை, பரிசுத்த ஆவியானவர் கடுமையாக கண்டித்து, கிறிஸ்து சிலுவையில் அறையபட்டவராக உங்கள் கண்களுக்கு முன் தெரியவில்லையா? நித்தியமான வாழ்வை அநித்தியமான காரியங்களுக்காக இழக்க போகின்றீர்களா? என எச்சரிக்கின்றார். கலாத்தியர் 3:1,3 "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?"

கிறிஸ்துவின் இரத்தினாலே மீட்கப்பட்ட நாம், பெற்றுக்கொண்ட பாவ விடுதலையை, மற்றவர்களும் பெற்றுக்கொள்ளும்படி நற்செய்தியை சொல்லாதிருக்கும்போது, பரிசுத்த பிதா திறந்த இரட்சிப்பின் வாசலை அடைக்கின்றவர்களாக, அதாவது, மற்றவர்கள் பிரவேசிக்க உதவாதவர்களாக இருக்கின்ற ஒவ்வொரு நாளும், நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினை விரயமாக்கிகொண்டிருக்கிறோம் (மாற்கு 16:15; மத்தேயு 28:18-20; 1பேதுரு 2:9).

நாம் நமது தார்மீக கடமையை புறந்தள்ளுகின்றோம், அது மிகவும் ஆபத்தானதாகும். 1கொரிந்தியர் 9:16,17 "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு. உற்சாக மில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே."

இறுதியாக,

பிரியமானவர்களே! நாம் மிகவும் நேசிக்கின்ற நமது ஆண்டவர் இயேசுவையும், நாம் மிகவும் உயர்வாக நினைக்கின்ற அவரது தியாகத்தினையும் அலட்சியம் செய்து, நம்மை பரிசுத்தம் செய்த இரத்தினை விரயமாக்கி கொண்டிருக்கின்றோம். ஆகையால், இன்றே, இப்பொழுதே நாம் மனந்திரும்புவோமாக! பாவ பழக்கங்களை விட்டொழிப்போம், பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, பரிசுத்த இயேசுவை பிரதிபலிப்போம். மற்றவர்களும் இந்த மகிமையான இரத்தத்தின் விடுதலையை அனுபவிக்க, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பகிர்ந்தளிப்போம். தாமதிக்க வேண்டாம் (2கொரிந்தியர் 6:1,2). இனியும் ஆண்டவர் இயேசுவின் இரத்தத்தினை விரயமாக்க வேண்டாம். சிந்திப்போம், செயல்படுவோம்! சந்திப்பின் நாளில் பலன் பெறுவோம்!

– அன்புடன், ஆசிரியர்

தேவனால் பயன்படுத்தப்படுவோம்



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான பெண்மணிகளே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

லீதியாள் தேவனால் பயன்படுத்தப்பட்ட விசுவாமுள்ள பெண். வேதாகமத்தில் பல பெண்கள் தங்கள் விசுவாசம், அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் மற்றும் சேவையின் மூலம் கடவுளால் பயன்படுத்தப்பட்டுள்ளனர் (சாராள், ரூத், எஸ்தர், மரியாள்) இவர்களைப் போல புதிய ஏற்பாட்டில் லீதியாளின் வாழ்க்கையும் கிறிஸ்தவ பெண்களுக்கு ஆழமான பாடங்களை சொல்கிறது.

லீதியாளைப் பற்றி (அப். 16:13-15) இவள் தியத்தீரா நகரத்தை சேர்ந்தவர், இரத்தாம்பரம் விற்கிறவளாக இருந்தார். (இவை செல்வந்தர்கள், அரசர்கள் பயன்படுத்தி விலையுயர்ந்த ஒன்றாகும்) இவள் தேவனை வணங்குகிறவளாக இருந்தாள்.

வழக்கமாய் ஜெபம் செய்யும் இடம் இவர்களுக்கு இருந்தது. பவுல் அங்கே தேவ வசனத்தை சொல்லும்போது அவைகளை கவனிக்கும்படி கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தார் (அப். 16:14). அவள் கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டாள். கடவுளின் வார்த்தை பெண்களாகிய நாம் நம் வாழ்வில் முழுமையாக, மனதார ஏற்றால் நம் வாழ்க்கை மாறும், குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். லீதியாள் அவளின் குடும்பத்துடன் திருமுழுக்கு பெற்றாள் (அப். 16:15,33).

இதன் மூலம் ஒரு பெண் தாய், மனைவி, சகோதரி கடவுளோடு உண்மையாய் நடந்தால் அந்த விசுவாசம் மற்ற குடும்ப உறுப்பினர்களுளையும் ஊக்குவிக்கும்.

லீதியாள் தன் கிறிஸ்தவ அன்பின் வெளிப்பாடாக பவுலையும், அவருடைய குழுவினரையும் தன் வீட்டில் தங்க அழைத்தாள் (அப். 16:15), (திருமுழுக்கு பெற்றவுடன்)

அன்பானவர்களே! நாம் இந்த லீதியாளைப்போல நம்முடைய வீடு, நேரம், திறமைகளை கர்த்தரின் சேவைக்காக பயன்படுத்த வேண்டிய மனதை ஆயத்தப்படுத்துவோம். நம் வீடு ஆசீர்வாதமான இடமாக அமைதியும், ஜெபமும் நடக்கும் இடமாக மாற தேவன் நமக்கு வசனங்களின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

திருச்சபைக்கு ஆதரவாக இந்த லீதியாள் இருந்திருக்கிறார் (அப். 16:40)ல் பவுலும், சீலாவும் சிறையிலிருந்து விடுதலை பெற்றபின், முதலில் லீதியாளின் வீட்டிற்கே சென்று விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார். இவரின் வீடு கிறிஸ்தவ விசுவாசிகளை உற்சாகப்படுத்த உதவின வீடாக இருந்தது.

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

அறிந்து கொள்வோம்

மாதம் ஒரு "பூ"

சண்பகம்



சண்பகம் (Magnolia champaca) (சம்பங்கி) என்பது என்றும் பசுமையான பெரிய தாவரம் ஒன்றாகும். இது தெற்காசியா, தென்கிழக்காசியா, சீனாவின் சில பகுதிகள் என்பவற்றை உள்ளடக்கிய இந்தோமலாயா சூழலியல் வலயத்தைத் தாயகமாகக் கொண்டது.

மிகுந்த நறுமணம் கொண்ட மஞ்சள் அல்லது வெண்ணிறப் பூக்களுக்காக இது வெகுவாக அறியப்படுகிறது. எனினும், முதன்மையாக இது பயிரிடப்படுவது இதன் வெட்டு மரத்துக்காகவாகும். அவ்வாறே, இது நகர்ப்புற நிலவடிமைப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. இதன் கவர்ச்சியான சதைப்பகுதி கொண்ட பழங்கள் பறவைகளை வெகுவாகக் கவரக் கூடியன.

இந்த பெண் தொழிலிலும், விசுவாசத்திலும் நேர்மையாக வாழ்ந்தாள். இன்றைய காலத்தில் பெண்கள் வேலை, குடும்ப பொறுப்பு நடுவில் சூழல்கிறார்கள். ஆனால் லீதியாள் இருந்த எல்லா சூழ்நிலைகளுக்கும் நடுவில் சிறப்பாக, சரியாக திகழ்ந்தாள். இவள் பொருளாதார ஆசீர்வாதத்தை தேவ மகிமைக்காக பயன்படுத்திய பெண் ஆவாள் (2கொரி. 9:6-8; லூக்கா 6:38)

நாமும் "தேவனால் பயன்படுத்தப்படும் பெண்ணாக" மனஉறுதியும், தேவ வார்த்தைக்கு நம் இருதயத்தை திறந்துக்கொடுத்து, அவர் வார்த்தைக்கு அப்படியே உடனே கீழ்ப்படிந்து கடவுளுக்குள் உறுதியான விசுவாசம், தாராள சேவை மனப்பான்மை ஆகியவற்றோடு வாழும்போது நம் வாழ்க்கையும், பல தலைமுறைகளுக்கு ஆசீர்வாதமாக மாறும். ஆமென்.

கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. பெவர்லி கிங்ஸ்லி

2 ஆயிரம் ஆண்டுகளுக்க முந்தைய இயேசு கிறிஸ்துவின் சகோதரர் கல்லறை பெட்டி கண்டுபிடிப்பு

இயேசு கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபின் எலும்புகள் வைக்கப்பட்டு இருந்த பெட்டி இஸ்ரேல் நாட்டில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

யாக்கோபு

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தார் என்பதற்கு பல்வேறு வரலாந்து சான்றுகள் உள்ளன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு நான ஆங்கில ஆண்டு கணக்கிடப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு இன்னொரு சான்றாக அவரது நம்பியின் கல்லறை பெட்டி இஸ்ரேல் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

இயேசு கிறிஸ்துவுக்கு யூதா, யாக்கோபு, யோசே, சிமோன் ஆகிய சகோதரர்களும், சகோதரிகளும் உண்டு என்று கிறிஸ்தவர்களின் புனித நூலான வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. யாக்கோபின் எலும்புகள் வைக்கப்பட்டு இருந்த பெட்டி நான் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது.

பெட்டியில் பெயர்

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இறந்தவர்களின் உடல்களை குகைக்களில் வைத்து பெரிய பாறாங்கல்லால் அதை முடி விடுவார்கள். அப்படித்தான் இயேசு கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபின் உடலும் அடக்கம் செய்யப்பட்டு இருக்கும். பின்னர் நீண்ட காலம் கழித்து அத்த கல்லறையை திறந்து எலும்புகளை பெட்டியில் சேகரித்து வைப்பார்கள். அந்த பெட்டியில் இறந்தவர்களின் பெயரும் பொதிக்கப்பட்டு இருக்கும்.

இயேசு கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபின் பெயர், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெட்டியில் 'அராமைக்' மொழியில் எழுதப்பட்டு உள்ளது. பெயருடன் யோசேப்பின் மகன் இயேசுவின் சகோதரர் என்றும் குறிப் பிடப்பட்டு உள்ளது, பெட்டி சுண்ணாம்பு கல்லால் செய்யப் பட்டு இருத்தது. கி.பி. 63-ம் ஆண்டில், அதாவது இயேசு சிலுவையில் அறையப்பட்டு 30 ஆண்டுகள் கழித்து இந்த பெட்டி செய்யப்பட்டு இருக்கக்கூடும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியா ளர் ஆண்ட்ரே லிமெய்ரே கூறியுள்ளார்.

ஆயத்தமா? அலட்சியமா?

மத்தேயு 25:1–13

எனக்கன்பான வாலிபர்களே! ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி. இம்மாதமும் வழக்கம்போல ஆண்டவர் இயேசு பேசின ஒரு உவமையை படிக்க ஆயத்தமாவோம்.

மத்தேயு 25:1-13-ல்

★ 10 கன்னிகைகள் மணவாளனை வரவேற்கக் காத்திருந்தனர்,

★ அனைவரிடமும் விளக்குகள் இருந்தன.

★ 5 பேர் ஞானமுள்ளவர்கள், கூடுதலாக எண்ணெயையும் எடுத்துச் சென்றனர்.

★ மற்ற 5 பேர் புத்தியற்றவர்களாய் எண்ணெயை எடுத்துச் செல்லவில்லை.

★ மணவாளன் தாமத்ததினால் அனைவரும் தூங்கிவிட்டனர்.

★ நள்ளிரவில் மணவாளன் வருகிறார் என்ற சத்தம் கேட்டது.

★ புத்தியில்லாதவர்களின் விளக்குகள் எண்ணெய் போதாமல் அணைய ஆரம்பித்தன.

★ அவர்கள் எண்ணெய் வாங்கச் சென்றபோது மணவாளன் வந்துவிட்டார்.

★ ஆயத்தமாயிருந்தவர்கள் திருமண வீட்டிற்குள் விருந்துக்குச் சென்றனர், கதவும் அடைக்கப்பட்டது.

★ பின்னர் புத்தியில்லாதவர்கள் வந்து எங்களுக்கு கதவை திறங்கள் என்றபோது "நான் உங்களை அறியேன்" என்றே பதில் கிடைக்க, மிகுந்த ஏமாற்றத்துடன் புத்தியில்லாதவர்கள் கடந்து சென்றனர்.

இந்த உவமை சொல்லும் சத்தியம் என்னவென்றால், 10 பேரும் அழைக்கப்பட்டவர்கள் தான். 5 பேர் முழு ஆயத்தத்தோடும், 5 பேர் முழுமையான ஆயத்தமில்லாமல் வந்தனர்.

1) எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்:

ஆண்டவர் வரும் நேரம் நமக்குத் தெரியாது. எனவே, இப்பொழுது கொஞ்ச காலம் பொழுதுபோக்கு, சினிமா, உலக இச்சை, செல்போன், உலகத்தின் ஆவி என எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு, பின் நாளில் மனந்திரும்பி சரிசெய்து விடலாம் என நினைப்பது போன்றது (மத்தேயு 7:21).

எல்லோரும் ஆண்டவருக்காக ஆயத்தமாக இல்லை என்கிற பாடத்தை கற்றுக் கொள்ள முடிகின்றது. எனவே, எச்சரிப்பின் சத்தத்திற்கு முழுமையாக செவிகொடுப்போம், முழு ஆயத்தத்தோடு ஆண்டவர் வருகைக்கு காத்திருப்போம்.

2) வார்த்தையின் வழிநடத்துதலோடு வாழ வேண்டும்:

சங்கீதம் 119:105 உமது வார்த்தை என் கண்களுக்கு விளக்கு. இங்கே விளக்கு கர்த்தரின்

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-

Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

வார்த்தையாய், நம்மை ஜீவபாதையில் நடத்துகிறதாய் இருக்கிறது. விளக்கு இருந்து, எண்ணெய் இல்லாவிட்டால்? எண்ணெய் நம்மை நடத்துகிற ஆவியானவரின் உணர்த்துதலும், எது தேவை, எது தேவை இல்லை என்பதை பகுத்தறிகின்ற ஞானம். இந்த ஞானத்தை பெற்றுக்கொள்ள சபைக்கு இடைவிடாமல் செல்லனும். ஒவ்வொரு செய்தியையும் உணர்வோடும், எனக்குத்தான் இந்த பாடம் ஆவியானவர் கற்றுக் கொடுக்கிறார் என்று நிறைவையும், தொடர்ந்து பெற்று, வார்த்தையின் வழிநடத்துதலோடு வாழ முயற்சிப்போம்.

3) மனவாளன் தாமதிப்பது இல்லை: 2 பேதுரு 3:9

ஆண்டவர் தாமதிக்கவே மாட்டார். எல்லாரும் நற்செய்தி அறிந்துகொள்ள வேண்டும், மனந்திரும்ப வேண்டும். ஆண்டவரே உலக ரட்சகர் என்றும், அவராலேயன்றி வேறே ஒருவராலும் இரட்சிப்பு இல்லை என மனுக்குலம் விசுவாசிக்க வேண்டும். (அப். 4:12).

4) அலட்சியம் வேண்டாமே: எபிரெயர் 10:25

காலம் கடப்பதை, இயல்பான வாழ்க்கையை, காத்திருப்பதை குறித்து எச்சரிப்போடு இருப்போம். இங்கே அந்த ஐந்து கன்னியர்களும் தூங்கியதில் வேறுபாடு இல்லை, ஆயத்தத்தில் இருந்தார்களா என்பதில் தான் இருக்கிறது. அடுத்த வாரம் Church-க்கு போவோம். இன்று இன்னைக்கு முக்கியமான Function இருக்கு, வெளியே போகிறோம், etc... இப்படி நிறைய காரணங்கள் சொல்லி சபை கூடுதலை தட்டிக் கழிக்கிறோம்.

இந்த வருடம் எல்லாவற்றையும் மாற்ற முயல்வோம். சபைக்கு தான் முக்கியம். சபைக்காக எதையும் இழக்க, தியாகம் செய்ய முன்வருவோம். நாளைக்கு என்று எந்தவொரு கர்த்தருடைய காரியத்தையும் தள்ளிபோட வேண்டாம்.

எனவே முழு ஆயத்தத்தோடும், வார்த்தையின் வழிநடத்துதலோடும், அலட்சியமின்றி ஒவ்வொரு நாளும், ஆண்டவர் இயேசுவின் வருகைக்கு புத்தியுள்ள கன்னிகைகளைப் போல இருப்போம்.

– உங்கள் அண்ணன் **ஜோசப் பிரதீப்**

Gospel Through Media by Evangelism Team

Philemon & Kingsly in Tamil: **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
Nambikkai TV: Sunday 3:30 - 4:00 pm.

Rajanayagam & Benny Martin in Tamil: **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

Arjunan in Tamil: Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

Hindi TV program: Sunny, Francis, & Vinay David: Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

P. K. Varghese in Malayalam: Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

Joshua & Ricky Gootam in Telugu:
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

Amul Bansod – Aurangabad (Marathi)

MCN News channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...

செப்டம்பர் - 2026

காலை			மாலை	
1 கொரிந்தியர்			சங்கீதம்	
1.	12	☐	135,136	☐
2.	13	☐	137-139	☐
3.	14:1-20	☐	140-142	☐
4.	14:21-40	☐	143-145	☐
5.	15:1-28	☐	146,147	☐
6.	15:2-58	☐	148-150	☐
			நீதிமொழிகள்	
7.	16	☐	1,2	☐
2 கொரிந்தியர்				
8.	1	☐	3-5	☐
9.	2	☐	6,7	☐
10.	3	☐	8,9	☐
11.	4	☐	10-12	☐
12.	5	☐	13-15	☐
13.	6	☐	16-18	☐
14.	7	☐	19-21	☐
15.	8	☐	22-24	☐
16.	9	☐	25,26	☐

காலை			மாலை	
2 கொரிந்தியர்			நீதிமொழிகள்	
17.	10	☐	27-29	☐
18.	11:1-15	☐	30,31	☐
			பிரசங்கி	
19.	11:16-33	☐	1-3	☐
20.	12	☐	4-6	☐
21.	13	☐	7-9	☐
கலாத்தியர்				
22.	1	☐	10-12	☐
			உன்னதப்பாட்டு	
23.	2	☐	1-3	☐
24.	3	☐	4,5	☐
25.	4	☐	6-8	☐
			ஏசாயா	
26.	5	☐	1,2	☐
27.	6	☐	3,4	☐
எபேசியர்				
28.	1	☐	5,6	☐
29.	2	☐	7,8	☐
30.	3	☐	9,10	☐

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431

தொடர்ந்து இதழில்...

பொதுவான செய்திகள் — காந்தி அருங்காட்சியகம், மதுரை



மதுரையில் காந்தி நினைவு அருங்காட்சியகம் 1959 ஆம் ஆண்டு கட்டமைக்கப்பட்டது. நாத்தூராம் கோட்சேவினால் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டபொழுது அணிந்திருந்த மேல்துண்டு இந்த அருங்காட்சியகத்தில் இரத்தக்கறையுடன் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த மகாத்மா காந்தி இதுவரை 20 முறை தமிழகம் வந்துள்ளார். அதில், 5 முறை மதுரைக்கு வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தகுந்த விசயம்.

1948 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்பு இந்திய மக்களின் ஆதரவிலும், நிதியுதவியினாலும் காந்தியின் பெயரால் நிறுவப்பட்ட காந்தி தேசிய நினைவு அறக்கட்டளையினால் எழுப்பப்பட்டது. இந்த அருங்காட்சியகம் ஏப்ரல் 15 அன்று 1959 ஆம் வருடம் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நினைவில்லம் ஐக்கிய நாடுகள் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைதிக்கான அருங்காட்சியகங்களில் ஒன்றாக இருக்கின்றது. மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள இராணி மங்கம்மாள் அரண்மனை, இந்த அருங்காட்சியக அமைவிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த நினைவில்லம் நிறுவப்பட்டது.

யோசேப்பு மன்னித்தல்

எனது அருமையான கர்த்தருடைய செல்லப் பிள்ளைகளே! இந்த மாதம் ஆதியாகமம் 44, 45 ஆம் அதிகாரத்தில், யோசேப்பு தன் சகோதரர்களை மன்னிப்பதை குறித்த நிகழ்வை நாம் படிக்கலாம்.

முன்பு ஒரு காலத்தில் யோசேப்பு அண்ணாவும், அவருடைய அண்ணன்களும் வனாந்தரத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள். யோசேப்பின் அண்ணன்கள் அந்த சமயத்தில் ஒரு சூழ்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். நம் அப்பாவிற்கு நம்மைவிட யோசேப்பின் மீது தான் அதிக அக்கறையும், அதிக பாசமும் உள்ளது. நாம் செய்யும் தீமையான காரியங்களையும் நம் அப்பாவிடம் சொல்லுகிறான். ஆகையினால் இவனை யாரிடமாவது விற்றுப் போடலாம் என்று ஆலோசனை பண்ணினார்கள். அந்த சமயத்தில் இஸ்மயேலர்கள் எகிப்துக்கு போகும்படியாக வந்தார்கள். யோசேப்பு அண்ணாவை அவர்களிடம் இருபது வெள்ளி காசுக்கு விற்றுப் போட்டார்கள். அவர்கள் யோசேப்பு அண்ணாவை எகிப்து நாட்டிற்கு கொண்டுபோய், போத்திபார் என்னும் அதிகாரியிடம் வீட்டு வேலை செய்யும்படியாக விற்றுவிட்டார்கள். ஆனாலும் கர்த்தருடைய கிருபை யோசேப்பு அண்ணாவோடு இருந்தபடியினால் எகிப்து நாட்டிற்கே மிகப்பெரிய அதிகாரியாக உயர்த்தப்பட்டார்.

இந்த காரியங்கள் நடந்த பின்பு, உலகமெங்கும் மிகவும் கொடிதான பஞ்சம் உண்டாயிற்று. ஆனால் எகிப்து தேசத்திலே அந்த கொடிய பஞ்ச காலத்திலும், குறைவு ஏற்படாமல் இருந்தது. சுற்றி இருந்த எல்லா நாடுகளிலும் இருந்து வந்து, எகிப்து நாட்டில் உள்ள யோசேப்பு அண்ணாவிடம் தானியங்களை விலைக்கு வாங்கிக் கொண்டு செல்வார்கள். அந்த சமயத்தில் கானான் தேசத்திலிருந்து யோசேப்பின் அண்ணன்மார்கள் தானியங்கள் வாங்கும்படியாக எகிப்திற்கு வந்தார்கள்.



யோசேப்பு அவர்களை பார்த்தவுடனே இவர்கள் என் அண்ணன்கள் என்று அறிந்து கொண்டார். ஆனால் அவர்களோ! இவர்தான் யோசேப்பு, தங்களுடைய தம்பி என்று அறிந்து கொள்ளவில்லை. யோசேப்பு அவர்களைப் பார்த்தவுடனே, மனம் கசந்து அழுது, என் அண்ணன்களே நான் தான் யோசேப்பு, நன்றாக உள்ளீர்களா? நம் அப்பா நன்றாக உள்ளாரா? என்று அவர்களை கட்டி அணைத்துக் கொண்டு, முத்தமிட்டு அழுது, அவர்கள் சாப்பிடுவதற்கு தேவையான உணவையும் ஆயத்தப்படுத்தி, ஒன்றாக அமர்ந்து சாப்பிட வைத்தார்.

எனது அருமை பிள்ளைகளே! இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்னவென்றால், நமக்கு யார் தீமை செய்தாலும், அவர்களுக்கு பதில் நாம் தீமை செய்யாமல், அவர்களுக்கு இரக்கம் செய்து, மன்னித்து, அவர்களிடம் அன்பு காட்டுவது தான் தலைசிறந்த ஒரு கிறிஸ்தவ பண்பாகும். ஏனென்றால் சர்வ வல்லமையுள்ள இயேசுவும் நம்மை மன்னித்து, நம்மிடம் அன்பு செலுத்தினார். நாமும் ஒருவருக்கொருவர் மன்னித்து, அன்பு செய்வோம். ஆமென்.

மனப்பாட வசனம்: ரோமர் 12:21

"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு."

– சகோ. பீட்டர்

சேபா நாட்டின் ராணி சாலமோன் ராஜாவைச் சந்தித்தல்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா! அனைவரும் நலமாக இருக்கின்றீர்களா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!. பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாலமோன் ராஜா மிகவும் நேர்மையானவராகவும், மிகுந்த ஞானம் மற்றும் புத்திக்கூர்மையுள்ளவராகவும் உலகம் முழுவதும் அறியப்பட்டார். அவருடைய பெருமையைக் குறித்த செய்திகள், வெகு தொலைவில் இருந்த சேபா நாட்டின் அரசியின் காதுகளுக்கு எட்டியது. சாலமோன் ராஜா உண்மையில் அவ்வளவு ஞானம் பெற்றவரா என்பதை நேரில் சென்று சோதனை செய்யும்படி விரும்பினாள்.

சேபாவின் ராணி, சாலமோன் ராஜாவைப் பார்க்க ஒரு பெரிய ஊர்வலத்துடன் பிரயாணம் செய்தாள். அதில், ஏராளமான ஒட்டகங்கள், விலையுயர்ந்த நறுமணப் பொருட்கள், அதிகப்படியான தங்கம் மற்றும் நவரத்தினக் கற்களைக் எடுத்துக்கொண்டு சாலமோன் ராஜா இருக்கிற எருசலேம் நகரத்தை வந்தடைந்தாள்.

சாலமோனைச் சந்தித்த சேபாவின் அரசி, தன்னுடைய மனதில் இருந்த அனைத்து கடினமான புதிர்களையும், கேள்விகளையும் கேட்கத் தொடங்கினால், அனைத்துப் புதிர்களுக்கும், கேள்விகளுக்கும் சாலமோன் ராஜா சிறிதும் தயங்காமல் மிகவும் தெளிவாக பதில் அளித்தார். அவரால் விடை சொல்லமுடியாத கேள்வி எதுவுமே இல்லை.

சாலமோனின் ஞானத்தைக் கண்டு வியப்படைந்த சேபாவின் அரசி, அவரது பிரம்மாண்டமான அரண்மனை, அங்கு அமைந்திருந்த நேர்த்தி, வேலைக்காரர்களின்



ஒழுக்கம் மற்றும் விருந்து உபசரிப்புகளைப் பார்த்து பிரம்மித்துப் போனாள்.

சேபாவின் அரசி சாலமோனைப் பார்த்து 'உங்களைப் பற்றி என் நாட்டில் கேள்விப்பட்ட செய்திகள் அனைத்தும் உண்மைதான். ஆனால், நான் கேள்விப்பட்டதை விட உங்களுக்கு ஞானம் அதிகமாக உள்ளது.' என்று சாலமோனைப் பாராட்டி, தான் கொண்டு வந்த தங்கம், ரத்தினக் கற்கள் மற்றும் நறுமணப் பொருட்களை சாலமோன் ராஜாவிற்குப் பரிசளித்தாள்.

அதற்கு பதிலாக சாலமோன் ராஜாவும் அரசி கேட்டுக்கொண்ட அனைத்தையும், பல அறிய பரிசுப் பொருட்களையும் அரசிக்கு வழங்கி அவருக்கு மரியாதை செலுத்தினார்.

கர்த்தருக்குள் பிரியமான செல்லப் பிள்ளைகளா!!! இந்த வரலாற்று சம்பவத்தில் நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால், ஞானமும், அறிவும், செல்வத்தை விடவும் மிகவும் மதிப்புமிக்கது. சாலமோன் ராஜாவின் ஞானம் மனிதனால் உண்டான ஞானம் அல்ல, அது பரிசுத்த கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஞானம். இனி நாம் ஜெபம் செய்யும்பொழுதெல்லாம் கர்த்தரிடத்தில் ஞானத்தை தரும்படி ஜெபம் செய்வோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 2:6

"கர்த்தர் ஞானத்தைத் தருகிறார், அவர் வாயிலிருந்து அறிவும் புத்தியும் வரும்"

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

உசியா ராஜாவின் ஆட்சி

செல்ல பிள்ளைகளா! எல்லாரும் எப்படியிருக்கீறீர்கள்?

இந்த மாதத்திற்கு பைபிளில் சூப்பரான ஒரு சம்பவம் கற்றுக்கொள்ளலாமா? ஒரு ஊரில், ரொம்பவும் நல்ல ஒரு குட்டி ராஜா இருந்தார். அவர் பெயர் உசியா.

அவருக்கு வயது வெறும் பதினாறுதான்! இவ்வளவு சின்ன வயசுலேயே அவர் யூதா என்ற பெரிய நாட்டுக்கு ராஜாவாக இருந்தார்.

ஆரம்பத்தில உசியா ராஜா ரொம்ப நல்லவராக இருந்தார். தினமும் பரிசுத்த கடவுளிடம் ஜெபம் பண்ணுவார். கடவுள் சொல்றத கேட்பார். ஆதனால, கடவுளும் அவருக்கு ரொம்ப உதவி செய்தார். அவருடைய நாட்டை செழிக்க வைத்தார்.

உசியா ராஜாவுக்கு ரெண்டு விஷயங்கள் ரொம்பப் பிடிக்கும்.

1. விவசாயம் : நாட்டுல நிறைய செடி, கொடிகள், மரங்கள், ஆடு, மாடுகளை வளர்த்து நாட்டை பசுமையானதாக வச்சிருந்தார்.


2. கண்டுபிடிப்புகள்: கோட்டைச் சுவர்களை எப்படிப் பாதுகாக்கிறதுனு யோசிச்சு, பெரிய பெரிய கோபுரங்களை கட்டி, எதிரிகள் வந்தா கல்லையும், அம்பையும் எறியுற மாதிரி புதிய மிஷின்களைக் கண்டுபிடிச்சார்! இதைச் செஞ்சதால நாடு ரொம்ப பாதுகாப்பாக இருந்துச்சு. மக்களும் உசியா ராஜாவை அவங்களோட சூப்பர் ஹீரோ மாதிரி கொண்டாடினாங்க.

மனசுல வந்த சின்னக் கர்வம்:

நாளுக்கு நாள் உசியா ராஜா பெரியவனாகவும் மாறினான். அப்போ அவன் மனசுல ஒரு கெட்ட எண்ணம் வந்துடுச்சு. நான்தான் இப்போ இந்த நாட்டுக்கே ராஜா ஆச்சே! நான் நினைச்சா என்னவேணாலும் பண்ணலாம். எதுக்கு நான் கடவுளை கும்பிடமட்டும் போகனும்? நேரா தேவனுடைய ஆலயத்துக்குள்ளேயே போய், அங்கே யாருமே செய்யக்கூடாத காரியத்தை செய்யப்போறேன்! அப்படின்னு நினைச்சார். தேவாலயத்தில நறுமணத் தூபம் காட்ற வேலை ஆசாரியர்களுக்கு மட்டும்தான் சொந்தம். ராஜாக்கள் அதை செய்யக்கூடாது என்பது கடவுள் போட்ட சட்டம். ஆனால் உசியா ராஜா, நான் ராஜா ஆச்சே, எனக்குப் பெரிய அதிகாரம் இருக்கு, நான் நினைச்சதைச் செய்வேன், அப்படின்னு சொல்லி, கையில் தூபக்கலசத்தோடு கோபமாக தேவலாயத்துக்குள்ளே நுழைந்தார்.

தடுத்த ஆசாரியர்கள்:

ராஜாவே இதை தயவு செய்து செய்யாதீங்க! இது கடவுள் நமக்குக் கொடுத்த சட்டம். தூபம் காட்டுறது எங்க வேலை, உங்க வேலை இல்ல, உடனே வெளியே போயிடுங்க என்றார்கள். அதையெல்லாம், உசியா ராஜா கேட்கல, மாறாக அவருக்கு ரொம்ப கோபம் வந்துச்சு, என்னை எதிர்த்துப் பேசுறீங்களா, அப்படின்னு கத்திக் கிட்டே நின்றார். இதனால் அவர் நெற்றியில் தொழுநோய்



வந்துச்சு, அவரை எல்லாரும் பார்த்து பயந்தார்கள். உசியா ராஜாவுக்கு ஒரே பயம். தலைதெறிக்க தேவாலயத்தை விட்டு ஓடினார். அதனால் நடந்தது என்ன தெரியுமா? குட்டீஸ்! அவருடைய ராஜா பதவி போச்சு, அரண்மனை வாழ்க்கை போச்சு, தனிமையாயிருந்து வியாதியுள்ளவராய் மரித்தும் போனார்.

இதிலிருந்து என்ன பாடம் கற்றுக்கொண்டீர்கள்?

1. பெருமை கூடவே கூடாது: நல்ல திறமை, அறிவு இருந்தால் கடவுளுக்கு நன்றி சொல்லனும்.

2. பைபிள் சட்டங்களுக்கு கீழ்படியனும்: பள்ளியில் முதல் மார்க்கு நீங்கள் வாங்கலாம். ஆனால் பைபிள் வசனங்களுக்கு, அம்மா, அப்பாவுக்கு, ஊழியருக்கு கீழ்ப்படியனும். கடைசிவரைக்கு நல்ல பிள்ளைகளாக, கடவுளுக்கு முன்பாக தாழ்மையுள்ளவர்களாக இருந்து கடவுளின் வசனத்துக்கு கீழ்ப்படிவோம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம்: 1 பேதுரு 5:5

"..பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."

— சகோ. அன்பு ஏசுதாஸ்

இஸ்ரயேலின் கடைசி அரசனான ஓசெயா

ஹாஸ் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்தமுறை ஓசெயா/ ஓசேயா என்ற ராஜாவை பற்றி படிக்கலாமா?

யூதாவின் ராஜாவான ஆகாஸின் ஆட்சியின் பன்னிரண்டாம் வருடத்தில் இஸ்ரயேலின் ராஜாவாக ஓசேயா ஆட்சி செய்ய தொடங்கின இவர், இஸ்ரயேல் நாட்டை ஒன்பது வருடங்கள் அரசாண்டார். இவருடைய தகப்பன் பெயர் ஏலா.

இவர் கர்த்தருடைய பார்வையில் தீமையானவைகளை செய்தார். ஆனாலும் இஸ்ரயேலின் மற்ற ராஜாக்களை போல அவ்வளவு மோசமானவராக இருக்கவில்லை. இவர் அசீரியாவின் ராஜாவான சல்மானேசருக்கு கப்பம்கட்டும் ஒரு சிற்றரசராக இருந்தார். ஆனால் இவர் எகிப்து நாட்டுடன் கூட்டுச் சேர்ந்து கப்பம்கட்டுவதை நிறுத்திவிட்டதினால் அசீரியாவின் ராஜா ஓசெயாவை சிறைப்பிடித்து போனார். அதுமட்டுமல்ல. அசீரியா சமாரியாவை மூன்று வருடங்கள் முற்றுகைப்போட்டு, ஓசெயாவின் ஒன்பதாம் வருடத்தில் அதை தங்கள் வசமான கைப்பற்றி இஸ்ரயேலர்களை அசீரியாவின் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு சென்றது.

குட்டீஸ்! இவ்வாறாக இஸ்ரயேல் தேசம் வீழ்ச்சியடைய காரணம் என்ன தெரியுமா? சிலை வழிபாடு மற்றும் (விக்கிரக ஆராதனை) தங்களை சுற்றியிருந்த நாடுகளுடைய வழக்கங்களைப் பின்பற்றி கடவுளுக்கு எதிராக பாவங்களை செய்ததுதான். அதுமட்டுமல்ல, தீர்க்கதரிசிகள் மூலமாக கடவுள் அவர்களை எச்சரித்த போதிலும், பிடிவாதமாக இருந்து, குழந்தைகளைப்



பலியிடுதல் மற்றும் குறிசொல்லுதல் போன்ற பாவங்களையும் செய்தார்கள்.

அதினாலே குட்டீஸ்! கடவுளுக்கு பிடிக்காத, அவர் வெறுக்கிற காரியங்களை செய்யாதே என்று வசனத்தின் மூலமும், ஊழியர்கள், போதகர்கள், சிறுவர் வேதபாட ஆசிரியர், பெற்றோர் மூலமாக கேட்டும், பிறரை பார்த்து அவர்கள் செய்கிறார்கள் நான் ஏன் செய்யக்கூடாது என்று நினைத்து செய்வோமானால் நமக்கும் கடவுளிடமிருந்து நிச்சயமாக தண்டனை உண்டு. எனவே, கடவுளுக்கும் அவர் வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து நடந்து தண்டனைக்குத் தப்பி, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வீர்களாக.

மனப்பாட வசனம்: சங்கீதம் 37:27

"தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்."

— சகோதரி குமினி பிரதீப்

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1.	M. ஜோனத்தான்	- கரூர்
2.	D. டேப்னி	- சென்னை
3.	D. ஜூனித்தா	- சென்னை
4.	A. ஹானா ஜோதிராணி	- மதுரை
5.	V. ஏஞ்சல் ஜோயன்னா	- மதுரை
6.	J. நவீன் பீட்டர்	- மதுரை
7.	J. கிறிஸ்டினா ஜாய்ஸ்	- மதுரை

சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோசேப்பு எவ்வாறு கடவுளுடைய குணத்தை தன் சகோதரர்களிடம் வெளிப்படுத்தினார்?
2. சேபாவின் அரசி எதைக் கண்டு பிரமித்துப்போனாள்?
3. சாலமோன் ராஜா ஞானத்தை யாரிடமிருந்து பெற்றுக்கொண்டார்? அது யாரால் உண்டானது அல்ல?
4. உசியா ராஜாவின் எந்த செயல் கடவுளுக்கு கோபத்தை உண்டாக்கியது?
5. ஓசேயா ஆட்சிக்காலத்தில் இஸ்ரயேலர்கள் வீழ்ச்சியடைய காரணம் என்ன?

ஆகஸ்ட் மாத கேள்விகள்



(யோவான் சுவிசேஷ புஸ்தகத்தில் இருந்து)

1) யூதருக்குள்ளே அதிகாரியான பரிசேயன் யார்?
2) நிக்கொதேமு இயேசுவிடம் எப்பொழுது வந்தான்?
3) மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது எது?
4) மனுஷகுமாரனை விசுவாசிக்கிறவன் அடைவது என்ன?
5) தேவன் தம்முடைய குமாரனை உலகத்துக்கு அனுப்பினது எதற்காக?
6) நான் சிறுக வேண்டும் என்று கூறியவன் யார்?
7) யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்தின் அருகே இருந்த ஊர் எது?
8) இயேசு யாக்கோபின் கிணற்றருகே உட்கார்ந்த நேரம் என்ன?
9) தண்ணீர் மொள்ள வந்த பெண் யார்?
10) "தாகத்துக்கு தா" யார் யாரிடம் கேட்டது?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-09-2026

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழின் பதில்கள்

1. யோவான் 1:1
2. யோவான் 1:6
3. யோவான் 1:8
4. யோவான் 1:42
5. யோவான் 1:43
6. யோவான் 1:46
7. யோவான் 1:47
8. யோவான் 1:50
9. யோவான் 2:2
10. யோவான் 2:11

சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
2) S. பாக்கியராஜம் - மதுரை
3) S. கார்த்திக் - கரூர்
4) K. பிலோமினா - விழுப்புரம்
5) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
6) Mrs. M. ஜெனி ஈஸ்வரி - கரூர்
7) M. ராஜா - கரூர்
8) R. சரோஜா - தென்கலம்
9) S. சுசிலா ஆபிரகாம் - மதுரை
10) Mrs. ஷெப்ஸிபா தாமஸ் - படப்பை
11) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
12) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
13) Mrs. ஷெலன் திலக் - தூத்துக்குடி
14) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
15) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
16) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
17) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
18) J. விஜய் - மதுரை
19) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
20) A. லலிதா - புதுக்கோட்டை
21) Mrs. M. பியூலா சாந்தி - ஈரோடு
22) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
23) D. ராஜன் - மதுரை
24) R. ஞானசிரோன்மணி - மதுரை
25) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
26) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
27) S. டேவிட் சாந்தகுமார் - செங்கோட்டை
28) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
29) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
30) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
31) M. அன்பழகன் - தங்கமேடு
32) N. ஜான் செல்லையா - மதுரை
33) Mrs. J. ஜெயராணி ஜான் - மதுரை
34) Mrs. சூரிய பிரியா - மதுரை
35) Mrs. ராணி குமரன் - கரூர்
36) Dr. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
37) A. அரவிந்த் - மதுரை
38) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
39) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
40) P.S. ருக்மணி - ஈரோடு
41) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
42) A. ரோஸ்மேரி - சென்னை
43) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
44) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
45) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
46) J. ஜான்சி - ஆனைமலை
47) N. ஞானசுந்தரி நாகராஜன் - பாளையங்கோட்டை
48) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
49) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை


தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th August 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th August 2026


நமது ஆசிரியர் எழுதிய இரண்டு புதிய புத்தகங்கள் கிடைக்கும்!











புதிய கைப்பிரதிகள் கிடைக்கும்!

புத்தகம் மற்றும்
கைப்பிரதிகள் தேவைக்கு
92 4421 4421
& 92 4431 4431

If undelivered please return to :
EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To